மாசடைந்த நீரைக் குடித்து நோய்களைப் பெறும் நிலைக்கு ஆளாகி, மருந்துகளை உட்கொள்வதைவிட, தூய்மையான நீரைக் குடித்து நோய்கள் பரவாமல் தடுப்பது உகந்தது. எனவே தூய்மையான நீர் மாசடையாமலிருக்க எச்சரிக்கை வகிக்க வேண்டும்.

மாசடைந்த நீரினைச் சுத்தப்படுத்திப் பயன் படுத்துகிற வழிமுறைகளைப் பெரியோர்களிடமிருந்து தெரிந்து கொண்டு எழுது.

____

____

____

@KTBS NOT TO BE REPUBLISHED

உனது ஊரிலோ, அருகிலோ இருக்கிற தொழிற்சாலைக்கு சென்று பார்வையிடு. தொழிற்சாலைகளில், பயன்படுத்திய நீரை என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனித்து எழுது.

____

____

____

____

____

உனது ஊரிலிருக்கிற நீரின் மூலங்கள் மாசடைந்ததற்கான காரணங்களைப் பற்றி ஏற்கனவே தெரிந்து கொண்டுள்ளாய். இந்த மூலங்கள் மாசடைவதைத் தடுப்பதற்காக எடுத்துக் கொள்கிற வழிமுறைகளைச் சிந்தித்து எழுதுக.

____

____

____

____

____

@KTBS
NOT TO BE REPUBLISHED

உனது ஊரிலும், பள்ளிக்கூடத்திலும் பயன்படுத்துகிற நீர் மாசடைவதை எவ்வாறு கட்டுப்படுத்துவாய்? என்ன வழிமுறைகளைக் கடைப்பிடிப்பாய்? சிந்திக்கவும் தெரிந்து கொண்டு எழுதுக.

____

____

____

____

____

நீர் விலை மதிக்கமுடியாத வளம் ஆகும். நமக்குக் கிடைக்கிற நீரின் அளவு மிகவும் குறைவு என்பது உனக்குத் தெரியும். இதனை தேவையின்றி தேக்கி வைத்தல் மற்றும் மாசடையாமல் பாதுகாப்பது எப்படி என, கற்றுக்கொள்க.

படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்

- நமது மாநிலம் மற்றும் நாட்டில் அதிக நதிகளில் நீர் மாசுபடிந்துள்ளன.
- ஃப்ளோரின், பாதரசம், ஆர்சானிக், ஈயம் போன்ற நச்சு நிறைந்த வேதியல் பொருட்கள் கலந்த நீரைக் குடிப்பதால் அபாயகரமான நோய்கள் பரவுகின்றன.
- மாசடைந்த நீரினால், நீர்வாழ் உயிரினங்கள் முக்கியமாக மீன்கள் மடிந்து வருகிற செய்திகள், நமது மாநிலத்தில் நிகழ்ந்துள்ளன.
- மாசு கட்டுப்பாடு வாரியம் நீரின் தரத்தைப் பாதுகாக்கும் வகையில் நியமிக்கப் பட்டிருக்கிற ஒரு அரசாங்க அமைப்பாகும்.
- நகரங்களில் நீரைக் **குளோரின்** என்ற வேதியல் பொருளினால் நுண்கிருமிகளில்லாதவாறு சுத்திகரித்து பிறகு அனுப்புகிறார்கள்.
- வேளாண் உரக் குழிகள், தொழிற்சாலைக் கழிவு நீர் குழிகள் போன்றவை கிணறு, குளம் முதலிய நீர் நிலைகளுக்கு அப்பால் 10 மீட்டர்களளவு தொலைவிலிருக்க வேண்டும். இல்லையெனில், இக்குழிகளில் சேகரமாகிற நோய்க்கிருமிகளுடன் கூடிய நீர், நீர் நிலைகளில் சேர்ந்து, அவற்றை மாசுபடச் செய்கின்றது.
- நீரைக் கொதிக்க வைப்பதால் அதிலிருக்கும் நோய்க்கிருமிகள் மடிகின்றன. கொதித்துக் குளிர்ந்த நீரைக் குடித்தால், உடல் நலத்திற்கு நன்மையளிக்கும்.
- கடல் நீரிலுள்ள உப்புச்சத்தினை நீக்கி, விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் பயன்படுத்தத் தகுந்த நீரைப் பெறுகின்ற முறை காய்ச்சி வடித்தல். இதற்கு அதிகளவு செலவாகும்.
- நீரின் பற்றாக் குறையைத் தடுக்க, கட்டிடங்களின் மேல் விழும் மழை நீரை சேகரிப்பதை நகரங்களில் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.
- நீர்பற்றாக் குறையினால், கைத்தொழில் நடைபெறுகிற பகுதிகளில் ஒரு முறை பயன் படுத்திய நீரைச் சுத்திகரித்து, மீண்டும் பயன் படுத்துவது நடைமுறையில் இருக்கிறது.

© KTBS NOT TO BE REPUBLISHED

அலகு - 8

உணவு-உடல்நலம்

E6N2F9

இவ்வலகைக் கற்றபின் நீ,

- சமச்சீர் உணவினைப் பற்றி விவரிப்பாய்.
- வெவ்வேறு புரதச் சத்துக்களை வகைப்படுத்துவாய்.
- உணவு பாதுகாக்கும் முறைகளைப் பயிற்சி செய்வாய்.
- விலங்குகள் மற்றும் பறவைகளின் உணவுப் பழக்கங்களைப் பற்றி கலந்துரையாடுவாய். இவற்றின் உணவு முறை, அலகு மற்றும் பற்களிற்கிடையிலிருக்கும் தொடர்பை அறிந்து கொள்வாய்.

@KTBS NOT TO BE REPUBLISHED

அன்று தீபாவின் பிறந்த நாள் விழா. கேரட் அல்வா அவளுக்கு மிக விருப்பமான இனிப்புப் பண்டம் ஆகும். அவளுடைய பிறந்த நாளன்று வீட்டில் கேரட் அல்வா செய்தார்கள். நன்றாக கேரட் அல்வாவை சுவைத்த தீபாவிற்கு உறக்கம் வரத் தொடங்கியது. உறங்கத் தொடங்கிய தீபாவின் கனவில் கேரட் வந்தது.

கேரட் : தீபா, நான் கேரட். என்னை வைத்து செய்த கேரட் அல்வாவை நன்றாகத் தின்றிருக்கிறாய். இப்பொழுது, நீ தினந்தோறும் உண்ணும் உணவினைப் பற்றி சிறிது கவனமாக இருக்க வேண்டும்.

தீபா : கேரட் அக்கா, நான் தினமும் பலவகை உணவுகளை நன்றாக உண்கிறேன், அத்துடன் அவை எந்த உணவுப் பொருட்களினால் தயாரித்துள்ளார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

கேரட் : சரி, அப்படியானால், உனக்குத் தெரிந்த உணவுப் பொருட்களைப் பட்டியலிடு.

தீபாவைப் போன்று நீயும், உனக்குத் தெரிந்த உணவுப் பொருட்களைப் பட்டியலிடு.

__________, __________, __________, __________,

__________, __________, __________, __________,

__________, __________, __________, __________.

தீபா : பட்டியல் தயாராகிவிட்டது பார்.

கேரட் : உனது பட்டியலிலிருக்கிற உணவுப் பொருட்களை, கீழே கொடுக்கப்பட்டுள்ள இடங்களில் வகைப்படுத்தி எழுதுக.



@KTBS
NOT TO BE REPUBLISHED

வளர்ச்சிக்குத் தேவையான உணவுகள்

1. ______________
2. ______________
3. ______________
4. ______________
5. ______________





கேரட் : நீ உட்கொள்கின்ற உணவுப் பொருட்களில் ஆற்றல் அளிக்கிற, வளர்ச்சிக்கு உதவுகிற மற்றும் உடல் நலத்தைப் பாதுகாக்கிற புரதச் சத்துக்கள் இருக்கின்றன என்பது உனக்குத் தெரியுமா?

தீபா : இல்லையே!

கேரட் : அப்புரதச்சத்துகள் (1) சர்க்கரைச்சத்து (கார்போஹைட் ரேட்ஸ்) (2) புரோட்டீன்கள் (3) கொழுப்புச்சத்து (4) மினரல்கள் (உப்புகள்) (5) விட்டமின்கள் (உயிர்ச்சத்து)



©KTBS NOT TO BE REPUBLISHED

இப்பொழுது இச்சத்துக்கள் எந்தெந்த உணவுப் பொருட்களிலுள்ளன என்பதை உனது நண்பர்களிடமிருந்து தெரிந்து கொள்.

நான் கேழ்வரகு என்னிடமுள்ள சத்துக்களில் மாவுச் சத்து முக்கியமானது. என்னால் உடலுக்கு ஆற்றல் கிடைக்கும்.

மாவுச்சத்து மிகுந்தளவுள்ள என்னுடைய மற்ற நண்பர்களின் படம் இங்கிருக்கின்றன. அவர்களை அடையாளம் கண்டு பெயரிடு.




__________, __________, __________, __________,



__________, __________, __________, __________.

மாவுச் சாத்து பற்றாக்குறையினால் ஆற்றலை இழக்கும் நிலைக்கு ஆளாக வேண்டும்.



தீபா இங்கே பார் நான் அவரைக் காய். என்னிடம் புரோட்டீன் சத்து மிகுந்துள்ளது. நான் உன்னுடைய உடல் வளர்ச்சிக்குத் துணை புரிகிறேன்.

எனது மற்ற நண்பர்களைக் காண். அவர்களை அடையாளம் கண்டு, பெயர்களை எழுது.

@KTBS NOT TO BE REPUBLISHED

  

____________, ____________, ____________, ____________, ____________,

தானியங்களில் மட்டுமின்றி மேலும் சில உணவுப் பொருட்களிலும் புரோட்டீன் சத்து மிகுதியாக உள்ளது. பின்வரும் படங்களை கவனித்து அவற்றின் பெயர்களை எழுது.

 

____________, ____________, ____________, ____________



கேரட் : தீபா, இங்கேபார் வெண்ணெய், வெண்ணெயில் கொழுப்பு உள்ளது. கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், நெய், வெண்ணெய் முதலியவற்றில் கொழுப்புச் சத்து மிகுதியாயுள்ளது.



தீபா : இதனால் நமக்கு பயன் என்ன?

கேரட் : இவற்றை சிறிது உட்கொண்டால் போதுமானது இவை கார்போஹைட்ரேட்டுகளை விட இருமடங்கு அதிக ஆற்றலை வழங்குகின்றன.

தீபா : அப்படியா ?

கேரட் : பலவகை காய்கறி, பழங்கள், உப்பு அல்லது மினரல் முதலியவற்றை நீ உணவில் சேர்த்துக் கொள்கிறாய் அல்லவா.

தீபா : ஆமாம். உண்கிறேன். ஆனால் கீரைகள் எனக்கு விருப்பமில்லை, கேரட் அக்கா.

கேரட் : பார் தீபா. அனைத்து வகைக் காய்கறிகள், கீரை, பழங்களை உண்ண வேண்டும். இவற்றில் மினரல்களும் உயிர்ச்சத்துக்களும் நிறைந்துள்ளன. எனவே, இவை உன்னை நோய்களிலிருந்து நீக்கி உடல்நலத்துடன் இருக்கச் செய்கின்றன.

©KTBS NOT TO BE REPUBLISHED

தீபா : ஆமாம். 4 முக்கிய உயிர்ச்சத்துகள் உள்ளன என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

கேரட் : இவற்றை ஏ,பி,சி,டி என்று அழைக்கிறார்கள். கீழ்க்கண்ட அட்டவணையைப் பார்.

விட்டமின்	**கிடைக்கும் உணவுப் பொருள் (மூலம்)**	**தேவை (பயன்)**
	பச்சை மற்றும் மஞ்சள் காய்கறிகள், பழங்கள், வெந்தயக் கீரை, கேரட், வெண்ணெய், நெய், பால் முட்டை.	ஆரோக்கியமான தோல் மற்றும் பற்கள், கண்பார்வை சரியாகச் செயல் படுகிறது.
	கோதுமை, கேழ்வரகு, உளுந்து, கீரைவகைகள், முளைவிட்ட தானியங்கள்.	தோல், இருதயம் மற்றும் சீரண உறுப்பு மண்டலத்தின் ஆரோக்கியம் சீராகிறது.
	ஆரஞ்சு, எலுமிச்சை, நார்த்தங்காய், தக்காளி, பச்சைக் காய்கறி, பெரிய நெல்லிக்காய், ஆப்பிள், அன்னாசி, முளைத்த தானியங்கள்.	பல் மற்றும் ஈறுகள் உறுதியாகின்றன
	மீன் எண்ணெய், சூரிய ஒளி தோலின் மீது படும்போது உடலில் **'டி'** விட்டமின் உருவாகிறது.	எலும்பு மற்றும் பற்களின் ஆரோக்கியத்திற்கு அவசியமாகிறது

©KTBS NOT TO BE REPUBLISHED

தீபா : கேரட் அக்கா, இவற்றை உண்ணவில்லை எனில் என்னவாகும்?

கேரட் : பின்வரும் அட்டவணையைப் பார்த்துக் கூறு.

விட்டமின் (உயிர்த்து)	**பற்றாக்குறையினால் ஏற்படும் நோய்**
	மாலைக்கண் (குறைந்த ஒளியில் பொருட்கள் காண்பதில்லை)
	பெரிபெரி நோய் (கால்வீக்கம் (நீர்நிறைந்து), நரம்புத்தளர்ச்சி சுவாசம் மற்றும் இருதயத்தில் குறைபாடுகள்)
	ஸ்கர்வி (மிருதுவான ஈறுகள் மற்றும் இரத்தம் கசியும் ஈறுகள், கால்வீக்கம்)
	ரிக்கெட்ஸ் நோய் (எலும்புகளின் விகார வளர்ச்சி, வளைந்த கால்கள், சுருங்கிய கால்கள்)

© KTBS NOT TO BE REPUBLISHED

கேரட் : எப்பொழுதும் நோயாளியாக இருக்க உனக்கு விருப்பமா?

தீபா : இல்லை, கேரட் அக்கா. ஆரோக்கியமாக இருப்பதற்கு எதை உண்ண வேண்டும்?

கேரட் : மேற்கண்ட அனைத்து உணவுகளுடன், உருளைக்கிழங்கு, முள்ளங்கி பீன்ஸ், தண்டு, தோலுடன் சேர்த்து பழங்கள், தானியங்கள் முதலியவற்றையும் உட்கொள்ள வேண்டும். இவற்றில் நார்ச்சத்து இருக்கின்றன. நார்ச்சத்து உணவைச் சரியாக செரிப்பதற்கு உதவுகிறது.

தீபா : இவ்வனைத்து உணவுப் பொருட்களையும் மொத்தமாக உண்ண வேண்டுமா?

கேரட் : அனைத்து உணவுப் பொருட்களையும் தேவையான அளவில் அன்றாடம் உட்கொள்ள வேண்டும். இதனால், உடலிற்கு அனைத்து உணவுச் சத்துக்களும் சரியான அளவில் கிடைக்கின்றன. இவ்வாறு எல்லா சத்துணவுகளையும் தேவையான அளவு உள்ளடக்கிய உடலுக்குத் தேவையான உணவு **சமச்சீர் உணவு** ஆகும். இதனுடன் 4 முதல் 5 தம்ளர்கள் அளவு நீரைக் குடிக்க வேண்டும்.

தீபா : சமச்சீர் உணவு எவ்வாறு இருத்தல் வேண்டும்?

கேரட் : இந்த அட்டவணையப் பார்த்துத் தெரிந்து கொள்.

சமச்சீர் உணவு அட்டவணை



நீர்	100 -இல் 75 பகுதி
மாவுச்சத்து	100-இல் 14 பகுதி
புரோட்டீன்	100-இல் 5 பகுதி
கொழுப்பு	100-இல் 4 பகுதி
விட்டமின்கள் மற்றும் மினரல்கள் (தாது உப்புகள்)	100-இல் 2 பகுதி

பாடி மகிழ்

தானியம், கரும்பில் சர்க்கரைசத்து,
எண்ணெய், நெய்யில் கொழுப்புச் சத்து
பயறு, பாலில் புரோட்டீன் சத்து.
காய்கறி, பழங்களில் விட்டமின் சத்து .
அனைத்து வகைகளிலும் மினரல்கள் அனைவருக்கும்
கொடுக்கும் ஊட்டச்சத்துகள் இவ்வனைத்தும்
தேவை உணவில் அன்றாடம் தேவையான அளவில்.

@KTBS NOT TO BE REPUBLISHED

விளையாடி மகிழ்

உனது நண்பர்களுடன் விளையாடு.

சீமை சுண்ணாம்பு (சுண்ணக்கட்டி) காலிடப்பாக்களை எடுத்துக் கொள். அவற்றை வண்ணக் காகிதங்களைக் கொண்டு அலங்கரிக்கவும். அவற்றின் மீது உணவுச்சத்துகளின் பெயர்களை எழுது.

வரைபடத் தாளை சிறுசிறு வில்லைகளாக கத்தரித்துக் கொள். அவற்றின் மீது உணவுப் பொருட்களின் பெயரை எழுது அல்லது படத்தை ஒட்டு.

ஆசிரியரின் துணையுடன், உணவுப்பொருட்களின் பெயர் அல்லது படத்தை ஒட்டிய வில்லைகளை அதற்கேற்ற உணவுச்சத்தின் பெயருள்ள டப்பாக்களில் நிரப்பு.

ஒவ்வொருவராக வந்து, டப்பாவிலிருக்கிற வில்லைகளை எடுத்து, உணவுப் பொருட்களின் பெயரை உரக்கப் படிக்கட்டும். பிறகு அவற்றை டப்பாவின் வெளிப் புறத்தில் வைக்கவும்.

இதற்குப் பிறகு அனைத்து வில்லைகளையும் சேர்த்து டப்பாவிலிருந்து சிறிது தொலைவில் குவித்துப் போடு.

மீண்டும் ஒவ்வொருவராக வந்து, குவியலிலிருந்து ஒரு உணவுப்பொருளின் வில்லையை எடுத்து, அதற்கு ஏற்ற உணவுச் சத்துள்ள டப்பாவிற்குள் போடட்டும். இதனை ஒருவர் கவனித்துக் கொள்ளவும்.

விளையாட்டின் இறுதியில் ஒவ்வொருடப்பாவிலும் சேகரிக்கபட்டுள்ள வில்லைகளை எண்ணி, எவற்றில் அதிகம், எவற்றில் குறைவு என்பதை குறிப்பிடுக.

தீபா : கேரட் அக்கா, நம்மைப் போன்றே, பிராணி பறவைகளுக்கும் உணவு தேவையல்லவா?

கேரட் : ஆமாம், அவையும் உணவு உட்கொள்கின்றன.

பின்வரும் பிராணிகளின் உணவு என்ன என்பதை எழுதுக.

வ.எண்	பிராணிகளின் பெயர்	உட்கொள்கிற உணவு
1.	புலி	
2.	கொக்கு	
3.	மான்	
4.	யானை	
5.	பருந்து	
6.	பட்டாம்பூச்சி	
7.	கொசு	
8.	பசு	
9.	நாய்	
10.	எலி	

©KTBS NOT TO BE REPUBLISHED

தீபா : விலங்குகள் உணவினை எவ்வாறு உண்கின்றன?

கேரட் : பிராணிகள் உணவு உட்கொள்ள அலகு, பல், கால் நகங்கள் எவ்வாறு துணைபுரிகின்றன என்று பார்த்துத் தெரிந்து கொள்.

படத்தைப் பார்த்து, கோடிட்ட இடங்களை நிரப்புக:





© NOT TO BE REPUBLISHED

- புலி தனது ____________ உதவியால் மாமிசத்தைப் பிளக்கிறது.
- கழுகு தனது உணவைப் பிடிப்பதற்கு ____________ கால்கள் உள்ளன.
- பட்டாம் பூச்சி ____________ ஐ உறிஞ்சுவதற்கு வசதியான உறிஞ்சி நாளம் உள்ளது.
- கொக்கு தனது உணவான ____________ ஐப் பிடிப்பதற்கு நீளமான அலகு உள்ளது.
- யானை கீரையை ____________ ஆல் பிடித்துத் தின்கின்றது.

இவ்வாறே, உனக்குத் தெரிந்த வெவ்வேறு பிராணிகளுக்கு அவற்றின் அலகு, கால் மற்றும் பற்கள் எவ்வாறு துணை புரிகிறது என்பதை எழுது.

விலங்குகளின் பெயர்	உணவு	உதவுகிற உறுப்பு	எவ்வாறு
1.			
2.			
3.			
4.			
5.			

NOT TO BE REPUBLISHED @KTBS

தீபா : ஆஹா! பிராணிகள் உணவு உட்கொள்கிற முறை அற்புதமாக உள்ளது. கேரட் அக்கா, சிறிது காத்திரு எனக்கு மீண்டும் பசிக் கிறது. மேலும் சிறிதளவு அல்வா தின்று விட்டு வருகிறேன்.

தீபா சமையல் அறைக்குச் சென்றாள். அங்கே கரப்பான் பூச்சிகள் அல்வாவைத் தின்று கொண்டிருந்தன. அதைக் கண்ட தீபா அலறினாள்.



கேரட் : தீபா, என்னவாயிற்று ?

தீபா : அல்வாவை கரப்பான்கள் தின்று கொண்டிருக்கின்றன. அவற்றை விரட்டு. நான் அல்வா தின்ன வேண்டும்.

கேரட் : வேண்டாம் தீபா. அந்த அல்வாவைத் உண்ண வேண்டாம். விலங்கினங்கள் உட்கார்ந்த தின்பண்டங்கள் அசுத்தமாயிருக்கும். அவற்றை உட்கொள்ளக்கூடாது.

தீபா : தின்றால் என்னவாகும்?

கேரட் : நாளிதழின் இச் செய்தியைப் படி.

அசுத்த உணவை உட்கொண்ட குழந்தைகளின் உடல் நலம் பாதிப்பு.

திருவிழா ஒன்றில் திறந்து வைத்திருந்த உணவை சில குழந்தைகள் உட்கொண்டதால் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளார்கள். அசுத் தமான உணவே இதற்குக் காரணம் எனப்படுகிறது. இந்த உணவை உட்கொண்டு வாந்தி பேதியினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற குழந்தைகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். தீவரமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற 4 குழந்தைகள் கூடுதல் சிகிச்சைக்காக நகரத்திலிருக்கும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

தீபா : ஐயோ! பாவம்

கேரட் : வா, உன்னை அருகில் நடைபெறுகிற திருவிழாவிற்கு அழைத்துச் செல்கிறேன், அங்கே பார். அந்தக் கடையில் விற்பனை செய்யப்படுகிற தின் பண்டகளைப் பார்.

தீபா : ஐயோ! அழுகிய பொருட்களின் மீது ஈக்கள் மொய்த்து கொண்டிருக்கின்றன. அவை அங்கிருந்து பறந்து வந்து இனிப்புப் பண்டங்கள் மீதும் மொய்த்துக் கொண்டிருக்கின்றன.

கேரட் : இத்தகைய உணவுப் பண்டங்களை உட்கொண்டால் காலரா போன்ற நோய்கள் வரும், எனவே, கிருமிகள் உணவுப் பண்டங்களின் மீது மொய்ப்பதைத் தவிர்க்க எப்பொழுதும், அப்பண்டங்களை மூடி வைத்திருக்க வேண்டும், சமையலுக்கு பயன்படுத்துகிற மற்றும் குடிக்கும் நீரைச் சேகரித்து வைக்கும் பாத்திரங்களை மூடி வைத்திருக்க வேண்டும். நீர் மாசுபடியாதவாறு பாதுகாக்கப்பட வேண்டும். உணவு உண்பதற்கு முன்பு கைகளைச் சுத்தமாகக் கழுவ வேண்டும். தெரிந்து கொண்டாயா?

தீபா : தெரிந்து கொண்டேன், கேரட் அக்கா.

NOT TO BE REPUBLISHED @KTBS

கேரட் : கெட்டுப் போன உணவை உட்கொள்ளக் கூடாது. பச்சைக் காய்கறிகளை நன்றாகக் கழுவித் தின்ன வேண்டும். பழங்களை வெட்டிய உடனே உண்ண வேண்டும். காய்கறிகளை அதிக நேரம் வேக வைக்கக் கூடாது. அவற்றிலிருக்கும் உணவுச் சத்துகள் நசிந்து போகின்றன. உணவைச் சமைப்பதால், அது மிருதுவாகிறது மற்றும் எளிதில் சீரணிக்கப்படுகிறது. அதிலிருக்கும் நோய்க்கிருமிகள் மடிந்து போகின்றன.

உணவினைச் சூடாக உட்கொள்ள வேண்டும். எண்ணெய்ப் பசையுள்ள, எண்ணெயில் பொரித்த மற்றும் மிகுதியாக வாசனைப் பொருட்களைச் சேர்த்த உணவுப் பொருட்களை அதிகமாக உட்கொள்ளக் கூடாது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

தீபா : இவையெல்லாம் நான் பின்பற்றிக் கொண்டிருக்கிறேன். தெரியுமா?

கேரட் : அப்படியெனில், கரப்பான்கள் தின்ற அல்வாவை முதலில் வெளியில் எறிந்து விடு.

தீபா : ஆகட்டும்.

தீபா அழுது கொண்டே அல்வாவை வெளிப்புறத்தில் எறிந்தாள். கனவில் விக்கி அழுது கொண்டிருந்த தீபாவை அவளது தாய் எழுப்பினார். தடாரென எழுந்து தீபா, அம்மாவை நோக்கி, ''அல்வாவைச் சரியாக மூடிவைத்திருக்கிறாயா?'' என்று கேட்டாள். அம்மா, ''தீபா, நீ ஏதேனும் கனவு கண்டாயா?'' என்று நகைத்தார்.

உனது வீட்டில் தயாரித்த உணவினை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருப்பாய்? குறிப்பிடு.

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. உணவிலிருக்கிற சத்துக்கள் __________, __________, __________, __________, மற்றும் __________,
2. பருப்பு வகைத் தானியங்களிலுள்ள சத்து __________
3. அன்றாடம், குறைந்த அளவு __________ தம்ளர் நீரைக் குடிக்க வேண்டும்.
4. மாலைக்கண் நோய் __________. உயிர்ச்சத்தின் குறைவால் ஏற்படுகிறது.
5. ஆரஞ்சுப் பழத்திலிருக்கும் மிகுதியான உயிர்ச்சத்து (விட்டமின்) __________

பின்வருபவனவற்றிற்குக் காரணங்களை எழுதுக:

1. அசுத்தமான உணவினை உட்கொள்ளக் கூடாது.

____

2. சமச்சீர் உணவினை உட்கொள்ள வேண்டும்.

____

3. உணவுப் பொருட்களை (சமைத்த) சரியாக மூடிவைக்கவேண்டும்.

____

4. தெருவில் விற்கிற திறந்த வைக்கப்பட்ட உணவு மற்றும் வெட்டி வைக்கப்பட்டிருக்கிற பழங்களை உட்கொள்ளக் கூடாது.

____

உயிர்ச்சத்துக்களை அவற்றின் பயன்களுடன் ஒப்பிடுக.

எ உயிர்ச்சத்து எலும்பு மற்றும் பற்களின் ஆரோக்கியத்திற்குத் தேவையானது.

பி உயிர்ச்சத்து களினால் தோல் மற்றும் கண்பார்வை சிறப்பாக இருக்கும்.

சி உயிர்ச்சத்து களினால் இருதயம் மற்றும் செரிமான உறுப்புகள் ஆரோக்கியமாக இருக்கும்.

டி உயிர்ச்சத்து களினால் பற்கள் மற்றும் ஈறுகள் உறுதியாக இருக்கும்.

உனக்கு இது தெரியுமா?

- சூரியக் கதிர்கள் உடலில் 'டி' விட்டமின் உருவாகத் துணைபுரிகின்றன.
- கழுத்துக் கழலை நோய் அயோடின் உப்பின் பற்றாக் குறைவால் ஏற்படுகிறது.
- அரிசி, கோதுமை, சோளம், கேழ்வரகு முதலியன நாம் மிகுதியாகப் பயன்படுத்துகிற பருப்பு வகைத் தானியங்களாகும்.
- நுண்கிருமிகள் உணவில் கலந்து விட்டால், உணவு கெட்டுப் போய் விடும் அல்லது அழுகிப் போகிறது. இந்த உயிரிகள் நச்சுப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. இத்தகைய உணவினை உட்கொள்வதினால் வயிறு மற்றும் குடல் தொடர்பான நோய்கள் உண்டாகின்றன. சில நேரங்களில் நோய்கள் தீவிரமாகி உயிருக்கு கேடு விளைவிக்கலாம்.
- உலர்த்துதல், உப்பைச் சேர்த்தல், புகை போடுதல், குளிரச்செய்தல், கொதிக்கவைத்தல் முதலிய வழி முறைகளினால் வீடுகளில் உணவினைப் பாதுகாப்பாக வைக்கலாம். விற்பனைக் கூடங்களில் பல வழிமுறைகளால் உணவைப் பத்திரப்படுத்தி, பாது காத்து விற்பனை செய்வார்கள்.

  எடுத்துக்காட்டு: குளிர்பானங்கள், பிரட், பழச்சாறு, பழக்குழம்பு (ஜாம்)

© KTBS NOT TO BE REPUBLISHED

அலகு - 9

உணவு - பழக்கம்

H5T9L8

இவ்வலகைக் கற்றபின் நீ,

- நாம் உணவை எங்கிருந்து மற்றும் எவ்வாறு பெறுகிறோம் என்பதை விவரிப்பாய்.
- சபையோருடன் (சமூக) விருந்து உண்ணுகிற வாய்ப்புகளைக் குறிப்பிடுவர். இங்கே பின்பற்றப் படவேண்டிய வழிமுறைகளைப் பழக்கப் படுத்திக் கொள்வாய்.
- உணவு மற்றும் கலாச்சாரப் பண்பாட்டின் (வகைகள்) வேறுபாடுகளைப் பாராட்டுவாய்.
- தங்களது மாவட்டம் மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களின் பண்பாட்டு வேற்றுமைகளைத் தெரிந்து கொள்வாய்.

@KTBS NOT TO BE REPUBLISHED

நானும் தீபாவும், உணவைப் பற்றி கலந்துரையாடிய செய்திகள் உனது மனதிலும் பதிந்திருக்குமென நம்புகிறேன். நம் அனைவருக்கும் தேவையான உணவு எங்கிருந்து மற்றும் எவ்வாறு கிடைக்கிறது? சிந்தித்திருக்கிறாயா?

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை கவனி. உணவு கிடைக்கிற வழிகள் (வகைகள்) காண்பிக்கப்பட்டுள்ளன. இந்த வகைகளை வரிசையாகக் குறிப்பிடு. எந்தப் படத்திற்குப் பிறகு எது இருக்க வேண்டும் என்று வரிசை எண்களாக எழுதிக்காட்டு. ஒவ்வொரு படத்தினைப் பற்றியும் ஒரு வாக்கியத்தில் அங்குள்ள காலியிடத்தில் எழுது.



@KTBS
NOT TO BE REPUBLISHED

©KTBS
Not to BE REPUBLISHED





©KTBS
NOT TO BE REPUBLISHED

உன்னுடைய வீட்டில் பயன்படுத்துகிற 10 உணவுப் பொருட்களைப் பட்டியலிடு. இவ்வுணவுப் பொருட்கள் எங்கிருந்து வாங்கிவரப்பட்டன என்பதையும் எழுது.

உணவுப் பொருட்கள்	கிடைக்கிற இடம்
1.	
2.	
3.	
4.	
5.	
6.	
7.	
8.	
9.	
10.	

©KTBS NOT TO BE REPUBLISHED

உன்னுடைய வீட்டில் அன்றாடம் தயாரிக்கும் சமையல் பண்டங்களை இங்கு எழுது. அவ்வாறே, உனது வீட்டில் விழா நாட்களில் தயாரிக்கிற உணவினை (சமையல்) யும் எழுது.

அன்றாடம் தயாரிக்கும் சமையல் (உணவு)	விழாநாட்களில் தயாரிக்கும் (உணவு) சமையல்

அனைத்து விழா நாட்களிலும் உன் வீட்டில் ஒரே வகையான உணவைத் தயாரிப்பார்களா? இல்லையெனில் வெவ்வேறு விழாக்களில் தயாரிக்கும் சிறப்பான சமையலை எழுது.

விழாக்களின் பெயர்	**தயாரிக்கும் சிறப்பு உணவு**
1.	
2.	
3.	
4.	
5.	

உனது பட்டியலை உன் நண்பர்களின் பட்டியலுடன் ஒப்பிட்டுப்பார்.

உனது வீட்டில் தயாரித்த சிறப்பு உணவினையும், உனது நண்பர்களுடைய வீட்டு சிறப்பு உணவினையும் ஒப்பிட்டுப் பார். நீ அறிந்து கொண்டதை இங்கே எழுது

____

____

____

@KTBS NOT TO BE REPUBLISHED

உற்சவம், திருவிழா, உருஸ் (முகமதிய சாதுக்களின் புண்யதினத் திருவிழா) முதலிய இடங்களில் நீ உணவு உட்கொண்டிருக்கிறாயா? வா, எங்கள் ஊர் திருவிழாவிற்குச் செல்லலாம். அதோ, அங்கேபார். ஊர்வலத்தில் அனைவரும் ஒன்றாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். மேளதாளங்களின் ஒலி மிகுந்திருக்கிறது. புலிவேடம், பொய்க்கால் குதிரை முதலிய பொழுதுபோக்குகள் அங்கிருப்பவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கின்றன. திருவிழாவில் கலந்து கொள்ள வந்திருப்பவர்கள் அனைவருக்கும், ஊர்மக்கள் ஒன்று கூடி விருந்து உபசரிப்பிற்கு ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். அனைத்து நபர்களுக்கும் உணவு ஏற்பாடு செய்வதற்கு மக்கள் துணைபுரிந்துள்ளனர். ஊர் மக்கள் அனைவரும் தமக்கேற்றவாறு பணம், அரிசி - பருப்பு வகைகள், விறகு முதலியவற்றை அன்பளிப்பாக அளித்துள்ளார்கள்.

சிலர் ஒன்று கூடி உணவை தயாரித்திருக்கிறார்கள். பலவகையான இனிப்பு பண்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. வா, நாமும் உணவு உட்கொள்வோம். உணவு உட்கொண்ட பிறகு, சிலர் உணவு உண்ட இலைகளை எடுத்து அப்புறப்படுத்தி சுத்தம் செய்கிறார்கள். நாமும் சேர்ந்து செய்யலாம்.

திருவிழாவில் பங்கேற்ற அனைவரும் மகிழ்ச்சியுடன் திரும்பிச் செல்கிறார்கள். அனைவரும் கூடி வேலையைப் பகிர்ந்து கொண்டு, கூடி உணவு உண்ட திருப்தி அடைந்துள்ளார்கள்.

நீயும் இதைப்போன்ற சமுதாய விருந்துகளில் கலந்து கொண்டு உணவு உட்கொண்டிருக்கலாம். அத்தகைய சூழ்நிலைகள் யாவை? நீ பங்கேற்ற ஒரு சமுதாய விருந்தைப் பற்றி விவரி.

____

____

____

நீ திருவிழாவில் பங்கேற்ற அனுபவத்தினை எழுது.

____

____

____

____

____

____

@KTBS
NOT TO BE REPUBLISHED

சமூதாயவிருந்து, உண்ணும் பொழுது பின்பற்ற வேண்டிய வழிமுறைகளின் பட்டியல் பின்வருமாறு.

படித்துத் தெரிந்து கொள்

- சமையல் செய்வதற்குப் பயன்படுத்தும் பொருட்கள், பாத்திரம் மற்றும் நீர் தூய்மையாக இருக்க வேண்டும்.
- சமையல் செய்பவர்கள் அணிந்திருக்கும். ஆடைகளும் தூய்மையாக இருக்க வேண்டும். நகங்களை வெட்டியிருக்க வேண்டும். தலைமுடியை துணியினால் கட்டிக் கொள்ள வேண்டும்.
- உணவு உண்ணும் இடத்தில் தூசு மற்றும் கிருமிகளில்லாதவாறு தூய்மைப்படுத்த வேண்டும்.
- சுத்தமான நீரைக் குடிப்பதற்கு கொடுக்க வேண்டும்.
- சமையல் செய்யும் இடங்களைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். தயாரிக்கப்பட்ட உணவில் கிருமிகள் - பூச்சிகள் விழாதவாறு எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.
- சமையல் செய்கிற இடங்கள் காற்றும் வெளிச்சமும் வரக்கூடியதாக இருக்கவேண்டும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பள்ளியில் மதிய சத்துணவு ஒரு சமுதாய விருந்து. சிந்திக்கவும். மதிய சத்துணவில் (mid-day meals) பின்பற்ற வேண்டிய முறைகளைக் கவனித்து விவரி.

வெவ்வேறு பிரதேசங்களில் வசிக்கின்ற மக்கள் வெவ்வேறு வகையான

உணவுப்பழக்கங்களைப் பின்பற்றுகிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா? எடுத்துக்காட்டாக, பெல்காவி, பீதர் முதலிய வட மாவட்டங்களில் சமையலில் சோளத்தை மிகுதியாகப் பயன்படுத்துவார்கள். அவ்வாறே மங்களூரு, உடுப்பி போன்ற கடற்கரை மாவட்டங்களில் மீனைப் பயன்படுத்தி செய்யும் சமையல் சிறப்பாக இருக்கும். மைசூரு, மண்டியா முதலிய மாவட்டங்களில் அரிசி மற்றும் கேழ்வரகை மிகுதியாகப் பயன்படுத்துகிறார்கள்.

© KTBS NOT TO BE REPUBLISHED

படித்துத் தெரிந்துகொள்க:

அந்தந்தப் பிரதேசங்களில் கிடைக்கும் உணவுப் பொருட்களுக்குத் தகுந்தவாறு அங்கு உணவுப் பழக்கம் இருக்கிறது. தமது பிரதேசம்/ குடும்ப வழக்கம், வளர்ந்து வந்த பிந்தைய முறைகளுக்கு ஏற்றவாறு பலவகை உணவு முறைகளைப் பின்பற்றுகிறார்கள்.

உனது மாவட்டத்தின் சிறப்பான சமையல் பண்டங்களை எழுதுக..

____

____

____

மற்ற மாவட்டங்களின் உணவு முறைகளைக் கவனித்திருக்கிறீர்களா? அப்பகுதிகளின் உணவு வகைகளை சுவைத்திருக்கிறீர்களா? உங்களது அனுபவங்களை இங்கு பகிர்ந்து கொள்ளுங்கள்.

அறிந்துக் கொள்க

- ஒரு பெரிய மலைப்பாம்பு ஓராண்டு காலம் வரையிலும் உணவு உட்கொள்ளாமல் உயிர் வாழவல்லது.
- நீ உட்கொள்கின்ற உணவின் மிகுந்த பகுதி, உனது உடலை வெப்பமாக வைத்திருக்கத் துணைபுரிகின்றன.
- உணவு உட்கொள்வதற்கு முன்பே பழங்களை உண்ணுதல் நன்மையளிக்கும். இவ்வாறு உண்பதால், பழங்களிலுள்ள உணவுச் சத்துக்கள் நன்றாக சீரணிக்கப்பட்டு இரத்தத்தில் கலக்கிறது.
- அநேக காய்கறிகளை சமைத்து உண்பதைவிட அல்லது பகுதியாக சமைத்து உண்பதால் நன்மை அதிகமாகும். காய்கறிகளை அதிகமாக சமைத்தால் அவற்றிலுள்ள உணவுச் சத்துக்கள் அழிந்துவிடுகின்றன.
- கி.பி 278 - இல் எகிப்தில் முள்ளங்கியை பயிரிட்டுவந்தார்கள். இதில் சுவாரசியமான செய்தி என்னவெனில், அக்காலத்தில் முள்ளங்கியின் நிறம் கருமையாக இருந்தது.
- எந்தவகை உணவினையும் மிதமான அளவில் உண்ண வேண்டும். மிகுதியாக உட்கொண்டால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது.
- அரிசியின் மேற்படலத்தில் 'பி' விட்டமின் மிகுதியாக இருக்கும். அரிசியை அதிகமாக பாலிஷ் செய்தால் 'பி' விட்டமின்கள் அழிந்து விடுகின்றன.
- ஒரு ஆப்பிள் பழத்திலிருக்கிற உணவுச்சத்துக்கள் 2 வாழைப் பழங்களில் அல்லது 5 பெரிய நெல்லிக்காய்களில் இருக்கின்றன.



©KTBS NOT TO BE REPUBLISHED

அலகு - 10

வசிப்பிடங்களின் வேற்றுமை

U2F4B4

இவ்வலகைக் கற்றபின் நீ,

- ஒவ்வொரு காலத்திலும் வீடுகளில் கட்டடமைப்பின் வேறுபாடுகளை அடையாளம் காண்பாய்.
- கிராமம் மற்றும் நகரப் பிரதேசங்களிலிருக்கும் வீடுகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை கண்டு கொள்வாய்.
- நகரங்களிலிருக்கும் பலமாடிக்கட்டிடம் மற்றும் குடிசைப் பிரதேசங் களைப் பற்றி அறிந்து கொள்வாய்.
- விலங்குகள் வசிக்குமிடம் மற்றும் தங்குமிடங்களின் வேறுபாடுகளை அறிவாய்.
- பறவை மற்றும் விலங்குகளின் கூடுகளின் அமைப்பு, அவற்றிற்கு பயன்படுத்துகிற பொருட்களின் வேறுபாடுகளை அடையாளம் காண்பாய்.

©KTBS NOT TO BE REPUBLISHED

வீட்டின் முக்கியத்துவம், அதனைக் கட்டுவதற்குத் தேவையான பொருட்கள், கட்டும் விதங்கள் (வகைகள்) பற்றி சில விவரங்களை நீ தெரிந்து கொண்டிருக்கிறாயா? நமது மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் கட்டுகிற வீடுகளைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

கல்வித் துறை முகாமொன்றை ஏற்படுத்தியுள்ளது. இங்கு மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து சிறுவர்கள் வந்துள்ளார்கள். அவர்கள் தங்களது பிரதேசங்களிலுள்ள வீடுகளைப் பற்றி கலந்துரையாடுகிறார்கள். வா, அங்கு செல்வோம். அதோ, அங்கே சிறுவர்களனைவரும் வட்டமாக உட்கார்ந்து இருக்கிறார்கள். ஒவ்வொருவராகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நாமும் உட்கார்ந்து கேட்கலாம்.

என் பெயர் சங்கீதா. நான் கல்புரகி மாவட்டத்திலுள்ள ஜீவர்கி தாலுகாவிலிருந்து வந்திருக்கிறேன். இங்கு வெயில் மிகுதி. மழை குறைவு. எங்கள் வீடுகளை சலவை கற்களாலோ அல்லது தட்டையானகற்களாலோ கட்டுவார்கள். மேற்கூரையில் மரப்பலகைகளை அடுக்கி, வைத்து அவற்றின் மீது மண்ணைக் கலந்து போடுவார்கள். அதன்மீது சிலர் சஹாபாத் தட்டையான கற்களை வைப்பர்கள்.

ஜீவர்கி பகுதி மக்கள் வீடுகளைக் கற்களால் கட்டுகிறார்கள். நண்பர்களுடனும் ஆசிரியருடனும் கலந்துரையாடி காரணத்தை எழுது.

இங்கு வீடுகளின் மேற்கூரையில் மண்ணை நிரப்புவார்கள் (போடுவார்கள்). காரணத்தை ஆசிரியருடனும், நண்பர்களுடனும் கூடி கலந்துரையாடி எழுது.

© KTBS NOT TO BE REPUBLISHED

என் பெயர் ஜான். சிக்கமகளூர் மாவட்டத்திலுள்ள கொப்பாவிலிருந்து வந்திருக்கிறேன். இங்கு அதிக மழைபொழியும். செங்கல் அல்லது மண்ணினால் சுவரைக் கட்டி, மேற்கூரையில் வைக்கோலினால். சரிவாகக் கூரை வெய்வார்கள். ஒவ்வொரு ஆண்டும் அதன்மீது புதிய வைக்கோல் புல்லைப் போடுவார்கள். 4-5 ஆண்டுகளிற்கு ஒரு முறை வைக்கோல் புற்களை முழுவதுமாக மாற்றிவிடுவார்கள்.



மேலும் சிலர் சிகப்புக் களிமண்ணினால் ஆன உறுதியான செங்கல்லினால் சுவர்களைக் கட்டுவார்கள். ஓடுகளைச் சரிவாக வைத்து மேற்கூறையைக் கட்டுவார்கள்.





சிக்கமகளூர் போன்ற மழை அதிகமாகப் பொழிகிற பிரதேசங்களில் மேற்கூரைகளைச் சரிவாகக் கட்டுகிறார்கள். ஏன்? சிந்தித்து எழுது.

மேற்கூரைக்கு வைக்கோல் புல்லைப் பயன்படுத்துவதனால் உண்டாகும் நன்மை என்ன? நண்பர்களுடன் கலந்துரையாடி விடையை எழுது.

என் பெயர் ஹசீனா. நான் பெங்களூரைச் சேர்ந்தவள். இந்நாட்களில் இங்கு வீடுகளின் மீது வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவை அடுக்கு மாடிக்கட்டடங்கள் எனப்படுகிறது. (பலமாடிக் கட்டடம்).

சுட்ட செங்கல் அல்லது சிமெண்டினாலான செங்கற்களால் மற்றும் இரும்புக் கம்பிகளால் வீடுகளைக் கட்டுகிறார்கள். தரையில் வண்ண வண்ணக் (ஒரு வகையான கற்களைப் பயன் படுத்துகிறார்கள். மேலேறிச் செல்வதற்கு படிகள் மட்டுமின்றி லிப்ட் (lift) வசதியும் இருக்கும். இத்தகைய பலமாடி அல்லது அடுக்குமாடிக்கட்டடங்களை கட்டுவதற்குப் பளுதூக்கும் இயந்திரம் (க்ரேன்), கலவை இயந்திரம் (மிக்ஸர்) போன்ற பெரிய இயந்திரங்கள் தேவைப்படுகிறன்றன.



பலமாடிக்கட்டடங்களினால் உண்டாகின்ற வசதிகள் யாவை? சிந்தித்து எழுது.

பலமாடிக்கட்டிடங்களால் உண்டாகும் வசதிகளைக் குழுவில் கலந்துரையாடி. உனது கருத்துக்களை எழுது.

என் பெயர் விவேக். நானும் கூட பெங்களூரைச் சார்ந்தவன். என்னுடைய வீடு ஒரு குடிசைப் பிரதேசத்தில் உள்ளது. இங்குள்ள வீடுகள் மிகவும் சிறியது. செங்கல், மரக் கீற்றுகள், தகடு முதலியவற்றால் கட்டியிருப்பார்கள்.

கீற்று அல்லது தகடினால் மூடிய மேற் கூரையை அமைப்பார்கள். சிலர் ஓடுகளினால் கூரையைக் கட்டியிருப்பார்கள். கழிவு நீர் அமைப்புகள் (சாக்கடை) இல்லாதிருப்பதால் பாத்திரம் கழுவிய, துணிதுவைத்த மற்றும் குளிக்கப் பயன்படுத்திய நீர் அனைத்தும் வீட்டின் முன்புறத்திலிருக்கும் குழியில் தேங்கும். ஒரு சிறிய இடத்தில் நூற்றுக் கணக்கில் மிக நெருக்கமாக வீடுகள் இருக்கின்றன. இதனால் போதிய அளவு காற்று, ஒளிகிடைப்பதில்லை. இங்கு வசிக்கின்ற மக்களும் வீடுகளைச் சுற்றிலும் தூய்மையாக வைத்துக் கொள்ளுவதில்லை. வீட்டின் குப்பைகள் அனைத்தையும் ஆங்காங்கே வீசி எறிவதால் குப்பைமேடுகள் உருவாகின்றன. ஈ, மற்ற பூச்சிகள், நோய்க்கிருமிகள் முதலியன இந்த அழுகிய குப்பை மேடுகளிலிருந்து நோய்களைப் பரப்புகின்றன.

இத்தகைய குடிசைப் பகுதிகளை நீ பார்த்திருக்கிறாயா? குடிசைப் பகுதிகளில் எவ்வித வளர்ச்சித் திட்டங்களைக் கொண்டுவரலாம்? சிந்தித்து 4 மாற்றங்களை எழுது.

வெவ்வேறு பிரதேசங்களில் கிடைக்கும் பொருட்கள், அப்பிரதேசங்களின் தட்ப வெப்பநிலை முதலியவற்றிற்கு ஏற்றவாறு வீடுகளைக் கட்டுகிறார்கள் என்பதை நீ அறிந்து கொண்டாயல்லவா? இப்பொழுது வெங்குப் பாட்டி கூறுகிற கதையைக் கேட்கலாம்.

© KTBS NOT TO BE REPUBLISHED



வெகுகாலமாக தனது கிராமத்திலேயே இருந்த வெங்குப்பாட்டி, பெங்களூரில் பல மாடிக் கட்டடத்தில் வசிக்கிற தனது பேரனின் வீட்டிற்கு வந்தார். அவ்விடத்தின் ஆடம்பரத்தைக் கண்டு அதிசயித்துப்போனார். சோபாவின் மீது அமர்ந்து சுதாரித்துக் கொண்டு, தனது சிறுவயது நாட்களை நினைவுகூர்ந்தார்.

அப்பொழுது நான் சிறுமி. நான், எனது 3 இளைய சகோதரிகள், இருஇளைய சகோதரர்கள் மற்றும் தந்தை - தாய் அனைவரும் கீற்றுக் குடிசையில் வசித்துக் கொண்டிருந்தோம்.

மழைபெய்தால் குடிசையில் நீர் ஒழுகிக் கொண்டிருக்கும். கோடையில், கீற்றுகளனைத்தும் உலர்ந்து போய், துளைகளைக் காணலாம். ஒரு நாள் எங்கள் குடிசை நெருப்பிற்கு இரையாகியது. குடிசை எறிந்து போன பிறகு, எனது பெற்றோர், ஒரு வீடு கட்டத் தீர்மானித்தனர். அப்பா மற்றொருவரின் துணையுடன் மண்ணைக் கலந்து சுவரை எழுப்பினார்.



கிராமத்தின் அருகிலுள்ள காட்டிலிருந்து, பெரிய பிரம்புக் குச்சிகளைத் துண்டித்து. அப்பா சுமந்து வந்தார். அம்மாவுடன் நான், எனது சகோதரிகள் மற்றும் சகோதரர்களும் சிறு பிரம்புக் குச்சிகளை சுமந்து வந்தோம். மண்சுவரின் மீது, இக்குச்சிகளை அடுக்கி, அவற்றின் மீது மண்ணைப் பரப்பினோம். பிறகு வயலில் அலைந்து திரிந்து நாங்கள் சேகரித்த சாணத்தைக் கலந்து, தரை மற்றும் உட்புறச் சுவர்களுக்கு அம்மா பூசினார், வீட்டின் முன்புறத்தைச் சாணத் தால் தூய்மைப்படுத்தி, செம்மண் கோலமிட்டு அலங்கரித்து வீட்டிற்குள் நுழைந்தோம்.

பிறகு நான் பெரிய பெண்ணானேன். எனக்கு திருமணம் நடைபெற்றது. எனது கணவனின் வீட்டிற்கு வந்தேன். அவ்வீடு எனது வீட்டைவிடச் சிறப்பாக இருந்தது. அவருடைய வீட்டை சுட்ட செங்கற்களால் கட்டியிருந்தார்கள். சுவர்களை சாணத்தால் மெழுகியிருந்தார்கள் மேற்கூரையில்

© KTBS NOT TO BE REPUBLISHED



மங்களூர் ஓடுகளை அடுக்கியிருந்தார்கள். நிலத்தில் கடப்பா கற்களைப் பதித்திருந்தார்கள். மரக் கதவுகளை அழகாகச் செதுக்கி இருந்தார்கள். அகலமான ஜன்னல்கதவுகள் இருந்ததால் போதிய அளவு காற்று, ஒளி வீசிக் கொண்டிருந்தது. எங்கள் அக்கம்பக்க வீடுகளையும் இவ்வாறே கட்டியிருந்தாலும், மேற்கூரையில் அடிக்கல்லைப் போட்டிருந்தார்கள். நிலத்தை சிமெண்டால் பூசிமிருதுவாக்கியிருந்தார்கள்.



நிலத்தில் சாணத்தையோ அல்லது செம்மண்ணையோ பூச வேண்டிய வேலை எனக்கிருக்கவில்லை. நீரால் வீட்டைத் துடைத்தால் போதும், பேரன் அளித்த காபியை உறிஞ்சியவாறு சுவைத்த வெங்குப் பாட்டிக்கு தனது மகளின் வீடு நினைவிற்குவந்தது, சிமெண்ட்கலவையிலான மேற்கூரை, சலவை (பளிங்கு) கல், வண்ணம்பூசப்பட்ட சுவர்கள், வீட்டைச் சுற்றிலும் செடிகள், மதிற்சுவர் என இவையனைத்தையும் கொண்ட மகளின் வீடு நன்றாக இருந்தது.

இப்பொழுது வெங்குப்பாட்டி தனது பேரனின் வீட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். 15-20 மாடிகளிலிருக்கின்ற கட்டடம். சுமார் 500-க்கு மிகுதியான வீடுகள் இருக்கின்றன. மேலிருக்கிற வீடுகளிற்கு (மாடிகளுக்கு) செல்வதற்கு லிப்ட் உள்ளது. இவ்வீடுகளைக் கட்டுவதற்கு பல வகை எந்திரங்களைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். வீட்டில் 3 அறைகள் உள்ளன. சாப்பாட்டு அறை, கூடம் (ஹால்) முதலியன நன்றாக இருக்கின்றன. ஆனாலும், தீப்பெட்டிகளை அடுக்கியிருப்பதைப் போன்று வீடுகளையும் அருகருகே கட்டியிருக்கிறார்கள். காற்று, ஒளி முதலியன சிறிது குறைவாகத் தான் வீட்டிற்குள் நுழைகின்றன. பொருட்களை அழகாக அடுக்கிவைப்பதற்கு அலமாரிகள் வைத்திருக்கிறார்கள். ஜன்னல்களுக்கு மரக்கதவுகள் இல்லை. அனைத்தும் இரும்பு அல்லது பிளாஸ்டிக் கதவுகளை வைத்திருக்கிறார்கள்.

குடிசையிலிருந்து வீடுகள் கட்டப்பட்டது வரையிலான மாறுபாடுகளை வெங்குப்பாட்டி கவனித்திருக்கிறாள்.

இக்கதையிலிருந்து நீ தெரிந்து கொண்டது என்ன? எழுது.

____

____

____

வெங்குப்பாட்டி கதையில் வந்துள்ள 5 வகையான வீடுகளைக் குறிப்பிடுக.

________, ________, ________, ________, ________.

© KTBS Not to be republished

உனது ஊரில் வீடு கட்டுவதில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாவை? பெரியோரைக் கேட்டு எழுது.

____

____

____

வீடுகள் கட்டுவதற்குப் பயன்படுத்துகிற பொருட்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குடிசையிலிருந்து பலமாடிக்கட்டடங்கள் வரை பயன் படுத்துகிற (கட்டுவதற்கு) பொருட்களை இங்கு எழுது.

____________________ ____________________

____________________ ____________________





____________________ ____________________

____________________ ____________________

©KTBS
NOT TO BE REPUBLISHED

பின் வருபவனவற்றின் விலைகளைத் தெரிந்து கொண்டு எழுது.

1. ஒரு மூட்டை சிமெண்ட்
2. ஒரு செங்கல்
3. ஒரு வண்டி மணல்
4. ஒரு டன் இரும்புக்கம்பி

தற்பொழுது	ஒரு வருடத்திற்கு முன்பு
________	________
________	________
________	________
________	________

வீடு கட்டப் பயன்படுத்துகிற மரங்களின் பெயர்களை தெரிந்து கொள்.

இங்கு வீடு கட்டவதற்குத் தேவையான பொருட்களின் படங்களுள்ளன. உன்னுடைய வீடு கட்டுவதற்குப் பயன்படுத்துகிற பொருட்களுக்கு (✓) குறியிடு.



நாம் கட்டுகிற வீடுகளில் மாறுபாடுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. விலங்குகள், பறவைகளின் வசிப்பிடங்களிலும் மாறுபாடுகள் உண்டாகியிருக்கின்றனவா? கவனியுங்கள்.

©KTBS NOT TO BE REPUBLISHED

நீ பல்வேறு பிராணிகளின் கூடுகளைக் கவனித்திருக்கிறாய் அல்லவா? கீழ்க்காணும் விலங்குகளின் கூடுகளை கவனித்து, அட்டவணையை நிரப்புக.

விலங்குகளின் பிராணிகளின் பெயர்	அவற்றின் வசிப்பிடங்கள்	கட்டுவதற்குப் பயன் படுத்து கிற பொருட்கள்
1. குருவி		
2. கரையான்புழு		
3. தூக்கனாங்குருவி		
4. கிளி		
5. புலி		
6. மீன்		
7. மரங்கொத்தி		
8. காகம்		
9. தவளை		
10. எலி		
11. தேனீ		
12. பாம்பு		

@KTBS NOT TO BE REPUBLISHED

நம்மை போன்றே விலங்குகளின் வசிப்பிடங்களிலும் பலவகைகள் உள்ளன. விலங்குகள் வெவ்வேறு வகை பொருட்களைப் பயன்படுத்தி தங்களது கூடுகளை விலங்குகள் கட்டுகின்றன அல்லவா?

செய்துபார் :

காகிதம், அட்டை, புல், கீற்று, முதலிய பொருட்களைப் பயன்படுத்திதி விலங்குகளின் கூடுகளைக் கட்டுவதற்கு முயற்சி செய். உனக்கு எளிதாகக் கிடைக்கக் கூடிய தீப்பெட்டி, அட்டை, மண் மற்றும் செங்கல் முதலிய பொருட்களைச் சேகரித்து வீடு கட்டு.

அறிந்துக் கொள்க:

- துபாயில் இருக்கின்ற **புர்ஜ் கலீஃபா** என்ற கட்டடம் உலகிலேயே மிக உயரமானது. இதன் உயரம் 829.2 மீட்டர்கள் (2722 அடிகள்) ஆகும்.
- இயத்தியாவின் மிகப் பெரிய குடிசைப் பகுதி மும்பையிலிருக்கிற **'தாராவி'** என்பதாகும். இங்கு 10 இலட்சத்திற்கும் மிகுதியான மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனை ஆசியாக் கண்டத்தின் மிகப் பெரிய குடிசைப் பகுதி என்றும் கூறுகிறார்கள்.
- தற்காலத்தில், இதமான, மிதமான பொருட்களைப் பயன் படுத்தி, சுற்றுச் சூழல் சேதமடையாதவாறு, சுற்றுச்சூழல் நட்புணர்வுடன் கூடிய வீடுகளைக் கட்டுவதற்கான திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி நீரைச் சூடேற்றுதல், மழை நீரைச் சேகரித்தல், குப்பையை வீட்டிலேயே நல்ல முறையில் நிர்வகித்தல் முதலியவற்றை பின்பற்றி வீடுகளைக் கட்டுவதற்கு மிகுதியான மக்கள் ஊக்கத்துடன் இருக்கிறார்கள்.
- எறும்புகளின் புற்றுகள் 650 ஏக்கர்களைவிட அதிகளவு பரவியிருப்பதாக தகவல்கள் உள்ளன. இவற்றை **மிகப் பெரிய புற்றுகள்** என்கிறார்கள். இப்புற்றுக்களில் இலட்சக்கணக்கில் எறும்புகள் வசிக்கின்றன.

© KTBS NOT TO BE REPUBLISHED

அலகு - 11

குப்பையிலிருந்து உரம்-கேப்பைக்கு வரம்

S1Q3U7

இவ்வலகைக் கற்றபின் நீ,

- கிராமம் மற்றும் நகரத்திலுள்ள கழிவுகளை வகைப்படுத்துவாய்.
- கழிவுகளை அப்புறப்படுத்துகிற சரியான முறைகளை அறிந்து கொள்வாய்.
- குப்பைகளைச் சரியான முறையில் அப்புறப்படுத்துவதைப் பழக்கப் படுத்திக் கொள்வாய்.

அழகிய காலைப் பொழுதில் வண்டு ஒன்று பறந்து வந்து குப்பைத் தொட்டியொன்றின் மீது அமர்ந்தது. குப்பைத் தொட்டி தான் தொல்லையுறுவதை வண்டிடம் கூறத் தொடங்கியது.

© KTBS NOT TO BE REPUBLISHED



©KTBS NOT TO BE REPUBLISHED





NOT TO BE REPUBLISHED

உலர்ந்த குப்பை

பிளாஸ்டிக், காகிதம், கண்ணாடி, உலோகத்துண்டுகள், துண்டுத்துணிகள், இரப்பர் முதலியன.

இவற்றை குப்பை பொறுக்கிச் செல்பவர்களிடம் கொடுங்கள்.

ஈரமான குப்பை

எஞ்சிய உணவுப் பொருட்கள், சமையல் அறை குப்பை, அழுகிய பொருட்கள், மாமிசம், வீடு மற்றும் தெருவில் அகற்றிய குப்பை, மாசுபடிந்த காகிதம் முதலியன.

இவற்றை உரமாக மாற்றுங்கள்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

நச்சுத் தன்மை உள்ள குப்பை



வண்ணக் கிருமிநாசினிகள், நச்சுத் தன்மையுள்ள வேதியல் பொருட்கள், உடைந்த ட்யூப் லைட்டுகள், பயன் படுத்திய மின் கலங்கள் (பாட்டரி) காலமுடிவுற்ற மருந்துகள் முதலியன.

இவற்றை பையில் போட்டுக் கட்டி, சரியான வகையில் அப்புறப்படுத்துவதற்காக, மாநகராட்சி தொட்டிகளில் போடுங்கள்

மாசடைந்த குப்பை:



காயத்திற்குக் கட்டும் துணிகள், பயன்படுத்திய பஞ்சு, ட்ரிப்ஸ், சிரிஞ்சு மற்றும் ஊசிகள் முதலியன.

இவற்றை பையில் போட்டு கட்டி தகுந்த முறையில் அப்புறப்படுத்த மாநகராட்சி தொட்டிகளில் போடுங்கள்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

@KTBS
NOT TO BE REPUBLISHED

@KTBS NOT TO BE REPUBLISHED


இந்த பிளாஸ்டிக் பைகளை வீசி எறிவதற்குப் பதிலாக, பொருட்களை வாங்கிவரவும், பொருட்களை வைக்கவும் பயன் படுத்தியிருந்தால் நன்றாக இருக்கும்.
பழம், காய்கறித் தோல்களைக் குழியில் போட்டிருந்தால் உரமாகி இருக்கும்.
இந்த டப்பாவை வீசி ஏறியாமல் அழகுபடுத்தி பயன்படுத்தி இருக்கலாம்.
இந்த உரத்தினால் பூமியின் வளம் மிகுந்திருக்கும்.
இந்த காலி சீசாக்களை விற்றிருந்தால் பணமாவது கிடைத்திருக்கும்.
காலி காகிதங்களை எழுதப் பயன்படுத்தியிருக்கலாம் இல்லை யெனில், படித்துமுடித்த, எழுதிய காகிதங்கள், பத்திரிக்கைகளை பழைய காகிதத்தை வாங்குபவர்களுக்கோ, கடைகளுக்கோ அளிக்கலாம்.

படித்துத் தெரிந்து கொள்

- வீட்டில் பயன்படுத்தும் பொருட்களின் அளவைக் குறைத்தால், குப்பையும் குறையும்.
- பயன்படுத்திய பொருட்களை மற்றுமொரு முறை பயன்படுத்த முடியும் எனில் அவ்வாறு செய்யலாம். இது மறுபடி பயன்படுத்துதல்.
- அழுகிப் போகிற குப்பையைப் பிரித்து எடுத்து உரம் தயாரித்து செடிகளுக்குப் பயன் படுத்தலாம்.
- பிளாஸ்டிக், கண்ணாடி, காகிதங்களை மறுபடியும் பயன்படுத்தி புதிய பொருட்களைத் தயாரித்தல். இதனை மாற்றியமைத்தல் என்கிறார்கள்.
- பயன்படுத்திய நீரைச் செடிகளுக்குப் ஊற்றுதல், அல்லது குழிகளில் பாய்ச்சுதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

வினாக்களுக்கு விடையளிக்க:

1. குப்பை என்றால் என்ன?

2. நீ குப்பை என்று வீசி ஏறிகிற 5 பொருட்களின் பெயர்களைக் கூறு.

3. உன் வீட்டு குப்பையை என்ன செய்வாய்?

4. வீட்டின் முன்புறம் அசுத்த நீர் தேங்கி நின்றால் என்னவாகும்?

5. உனது கடந்த ஆண்டு புத்தகங்களை என்ன செய்தாய்?

6. உனது ஊரில் இருக்கிற குப்பையை அகற்றும் இலாகாவின் முகவரியைத் தெரிந்துகொண்டு எழுது?

7. குப்பையினால் உண்டாகின்ற பயன்பாடுகளைப் பட்டியலிடு.

@KTBS NOT TO BE REPUBLISHED

பின்வருபவனவற்றில் எது சரி? எது தவறு? தவறானவற்றை சரியாக எழுது:

1. நான் குப்பையை எந்த இடத்திலும் வீசி எறிவேன்.

   ____

2. சிறியதாகிப் போன என்னுடைய உடைகளை மற்றவர்களுக்குக் கொடுப்பேன்.

   ____

3. வீட்டிலிருக்கும் பிளாஸ்டிக் பைகளை சேகரித்து, தேவையான நேரத்தில் பயன்படுத்துவேன்.

   ____

4. கெட்டுப்போன பிளாஸ்டிக் பொருட்களைச் சேகரித்து, பழைய பொருட்களை வாங்கிக் கொள்ள வருபவனிடம் கொடுப்பேன்.

   ____

5. நச்சுத் தன்மையுள்ள குப்பையை உரக்குழிகளில் போடுவேன்.

   ____

உனது வீட்டில் குப்பை என்று வீசி எறிகிற 5 பொருட்களைப் பட்டியலிடு. அவை எந்தக் குழுவைச் சேர்ந்தவை என்பதை எழுது. அவற்றை நீ என்ன செய்வாய் என்பதையும் எழுதுக.

வ.எண்	**குப்பையின் பெயர்**	**குழு**	**என்ன செய்வாய்?**
எடுத்துக்காட்டு	காய்கறித்தோல்	ஈரமான குப்பை	செடிகளுக்குப் போடுவேன்
1.			
2.			
3.			
4.			
5.			

NOT TO BE REPUBLISHED @KTBS

செய்துபார்க்க:

அழுகிப்போகின்றவை எவை?

ஒரு பெரிய கண்ணாடி சீசாவை எடுத்துக் கொண்டு, அதனுள்ளே அரைப்பாகத்திற்கு மண்ணை நிரப்பு. அதன் மீது இலை, காய்கறி, பழத்தோல், சிறு காகிதத் துண்டுகள் பிளாஸ்டிக் காகிதத் துண்டுகள், இரப்பர் துண்டுகள், பருத்தி, சிறு சீசாக்கள் முதலியனவற்றை நிரப்பி, மேலும் சிறிது மண்ணை நிரப்பி நீரைத் தெளி. வாரத்திற்கொருமுறை இப்பொருட்களைக் கவனித்து, கிளறிவிடு. சுமார் 3 முதல் 4 வாரங்கள் வரையிலும் இதனைக் கவனி. பிறகு, சீசாவிலுள்ள பொருட்களை ஒரு நாளிதழின் மீது கவிழ்த்துப் போட்டு, அங்கிருக்கும் பொருட்களைக் கவனி. சீசாவில் நிரப்பிய பொருட்களில் அழுகிப் போகிற பொருட்கள் யாவை? தாமதமாக (நிதானமாக) அழுகிப் போகிற பொருட்கள் யாவை? என்பதைப் பட்டியலிடு.

1. இச் செயல்பாட்டிலிருந்து நீ அறிந்து கொண்டது என்ன?

____

____

செய்துபார்:

உனது வீட்டுக் குப்பையை மூன்று நாட்கள்வரை சேகரித்து வைக்கவும். இவற்றை அழுகுகிற மற்றும் அழுகாத குப்பைகளை பிரித்துவை. தற்பொழுது, இவ்விரண்டின் வடிவங்களையும் கவனி.

2. நீ கவனித்த இரண்டு அம்சங்களை எழுது.

____

____

3. பள்ளிக்கூடம் மற்றும் வீட்டில் பிரித்தெடுத்த அழுகிப் போன குப்பையிலிருந்து உரம் தயாரிக்கவும்.

செய்துபார்க்க:

நண்பர்களுடன் கூடி, உனது பள்ளிக்கூட மைதானத்தின் தோட்ட மூலையில் ½ மீட்டர் அகலமும் 1 மீட்டர் ஆழமுள்ள ஒரு குழியைத் தோண்டு. அதன் அடித்தளத்தில், பள்ளியில் வீழ்ந்திருக்கின்ற உலர்ந்த இலைகள், புற்கள், காகித துண்டுகள் முதலியனவற்றைப் பரப்பி அவற்றின் மீது நீரைத் தெளி. பிறகு சிறிதளவு மண்ணைப் பரப்பிவிடு. நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற குப்பையக் குழியில் போட்டு. நீரைத் தெளித்து, சிறிதளவு மண்ணைப் பரப்பிவிடு. அவ்வப்பொழுது குப்பையைக் கிளறிக் கொண்டிருக்கவும். மூன்று வாரங்களில் உரம் தயாராகிறது. இதனை உனது பள்ளிக் கூட தோட்டச் செடிகளுக்குப் போடு. உனது வீட்டிலும் உரம் தயாரிக்கவும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

4. குப்பையைச் சரியான முறையில் அகற்றி மீண்டும் பயன் படுத்தவதற்கு அருகிலுள்ள வீட்டுக்காரர்களையும் ஊக்கப்படுத்து. சுவரொட்டிகளைத் தயாரித்து, பள்ளிக்கூடம் மற்றும் ஊரின் முக்கியமான பகுதிகளில் ஒட்டவும்.

செய்துபார்க்க :

முட்டை ஓட்டில் பெங்குவின்

முட்டையின் மேற்பாகத்தில் துளை செய்து, அதனுள்ளிருப்பதை எடுத்து விட்டு, எஞ்சிய முட்டையின் மேல் ஓட்டினை வீசி எறிய வேண்டாம்.

கண் அல்லது காதில் விடுகின்ற சொட்டு மருந்து நிரப்பியின் இரப்பர் மூடியை முட்டையின் மற்றொரு முனையின் மீது வைக்கவும்.



துளையிட்ட பகுதி அடிப்பகுதியில் இருக்கட்டும். அட்டையில் இறக்கை வடிவத் துண்டுகள் இரண்டை துண்டித்து கருமை நிறத்தால் பூசி முட்டை ஓட்டின் இரு பக்கங்களிலும் ஒட்ட வைக்கவும். மூடியில் கண்வடிவப் புள்ளிகள் இரண்டை வரை. உனது பெங்குவின் தயார். அழகுப் பொருளாக வீட்டினுள் வைக்கவும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

செய்து பார்க்க:

பிளாஸ்டிக் காகிதத்தினால் மழைத் தொப்பி

- பிளாஸ்டிக் பையைத் துண்டிக்கவும். இக்காகிதம் உங்கள் தலையின் சுற்றளவிற்குச் சரியாகப் பொருந்துமாறு இருக்கட்டும்.
- காகிதத்தை இரண்டு அங்குல சமமான மடிப்புகளாக்குக.
- மடிப்பின் இரண்டு முனைகளையும் சேர்த்து, வைத்துத் தைக்கவும். உனது தலையை வெயிலிலிருந்து அல்லது மழையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளத் தொப்பி தயார்.

இதே முறையில் பிளாஸ்டிக் அல்லது உலோக டப்பாக்களை அழகுபடுத்தி

(அலங்கரித்து) பேனாக்களை வைக்கும் டப்பா, பூச்சாடிகளைத் தயாரித்து வீடுகளை அலங்கரிக்கவும்.

அறிந்துக் கொள்க:

- இந்தியாவில் உற்பத்தியாகின்ற குப்பை கூளங்களின் நூறு பகுதியில் 75-80 பகுதியை உரமாக மாற்றி பயன்படுத்தலாம்.
- கண்ணாடி, உலோகம், பிளாஸ்டிக் பொருட்களை உருக்கி புதிய பொருட்களைத் தயாரிக்கிறார்கள்.
- சில பொருட்களை கட்டுவதற்காக (பாக்கிங்) அப்பொருட்களை விட அதிக விலையுள்ள பொருட்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் கணக்கிலடங்கா கடல்வாழ் உயிரிகள் பிஸ்டிக் குப்பைகளால் இறக்கின்றன.
- வீசி எறிகிற பருத்தி துணி ஒரு மாதத்தில் அழுகிவிடும், நைலான் துணிகள் 500-600 ஆண்டுகளில் அழுகிவிடுகின்றன.

©KTBS NOT TO BE REPUBLISHED

இப்பொருட்கள் எப்பொழுது அழுகிவிடுகின்றன?



அலகு - 12

வரைபடம் கற்றுக்கொள் - வழியைத் தெரிந்து கொள்

N7S2M8

இவ்வலகைக் கற்றபின் நீ,

- இருப்பிடத்திலுள்ள அடையாளங்களுக்கேற்றவாறு திசைகளைக் குறிப்பிடுவாய்.
- வரைபடத்தை வரைதலின் தொடக்க நிலைகள் மற்றும் இடத்தைக் குறிப்பிடுவதற்கு வெவ்வேறு வகை குறியீடுகளைப் பயன்படுத்தி வரைபடத்தை (Map) உருவாக்குவாய்.

வரைபடத்தினைப் பற்றி சில செய்திகள் உனக்குத் தெரியும். கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தைக் கவனி. ஊரின் நடுவில் பெரிய ஆலமரம் இருக்கிறது. அதனைக் குறிப்பிடு.



பின்வரும் இடங்கள், ஆலமரத்திற்கு எந்த திசையில் இருக்கின்றன என்பதை அடையாளம் கண்டு எழுது.

1. ஏரி ______________________
2. நூலகம் ______________________
3. பள்ளிக்கூடம் ______________________
4. அஞ்சல் நிலையம் ______________________
5. பூங்கா ______________________
6. கோவில் ______________________
7. நியாய விலைக்கடை ______________________
8. கால்நடை மருத்துவமனை ______________________
9. மசூதி ______________________
10. தேவாலயம் ______________________
11. மருத்துவமனை ______________________
12. கிணறு ______________________

©KTBS NOT TO BE REPUBLISHED

பின்வரும் படத்தில் உனது வீடு காண்பிக்கப் பட்டுள்ளது. உனது வீட்டைச் சுற்றியுள்ள இடங்களை திசைகளுக்கு ஏற்றவாறு எழுதுக.



உனது பள்ளியைச் சுற்றியுள்ள இடங்களைத் திசைகளுக்கு ஏற்றவாறு எழுதுக.

கிழக்கு	____________	மேற்கு	____________
வடக்கு	____________	தெற்கு	____________
வடகிழக்கு	____________	தென்மேற்கு	____________
வடமேற்கு	____________	தென்கிழக்கு	____________

உனது பள்ளியிலிருக்கிற கருநாடக மாநிலத்தின் வரைபடத்தைக் கவனி. கீழே கொடுக்கப்பட்டுள்ள இடங்கள் மாநிலத்தின் எந்தத் திசையிலுள்ளன என்பதை எழுது.

அரபிக் கடல்	____________	ஆந்திரப்பிரதேசம்	____________
மகாராஷ்டிரம்	____________	கேரளா	____________

4-வது வகுப்பில் படிக்கிற யாஸ்மின் தனது பள்ளிக்கூட அறையின் வரைபடத்தை வரைவதைக் கற்றுக் கொண்டிருக்கிறாள். அவளது அனுபவத்தைக் கேள்.

யாஸ்மின் : எங்கள் ஆசிரியர் வகுப்பறையின் நீளம் மற்றும் அகலத்தை எங்களது பாத அடியினால் அளக்கக் கூறினார். அவ்வாறு அளக்கையில், அறையின் நீளம் நான் நடக்கும் அடியில் பன்னிரண்டு அடிகள் உள்ளன மற்றும் அகலம் 10 அடிகளுள்ளன. எனது இரண்டு அடிகள் சுமார் ஒரு மீட்டருக்குச் சமம் என ஆசிரியர் கூறினார். ஒவ்வொருவரின் அடிச் சுவடிலும் சிறு வேறுபாடு இருக்கும். இவ்வாறாக சிலரின் அடியளவு முக்கால் மீட்டர் இருக்கலாம். நீயும் உனது அடியளவைத் தெரிந்து கொள். உன்னுடைய அறையினை உனது அடியினால் அளந்து குறித்து வைத்துக் கொள். இதனைக் காகிதத்தின் மீது செய்வது எப்படி என்பதை நான் கற்றுக் கொடுக்கிறேன். நீ அளந்த அறையின் நீளம் 12 அடிகள், அகலம் 10 அடிகள் என்று வைத்துக் கொள்ளலாம்.

அவ்வாறே! உனது இரண்டு அடிகள் ஒரு மீட்டருக்குச் சமமானால்,

12 அடிகள் : 6 மீட்டர்கள்

10 அடிகள் : 5 மீட்டர்கள்

என்றால், அறையின் நீளம் = 6 மீட்டர்

அறையின் அகலம் = 5 மீட்டர்

NOT TO BE REPUBLISHED @KTBS

இப்பொழுது ஒரு மீட்டர் அளவை, அளவுகோலில் ஒரு சென்டிமீட்டராக மாற்றுகையில்.

6 மீட்டர் = 6 செ.மீ (cm)

5 மீட்டர் = 5 செ.மீ (cm)

இந்த செ.மீ அளவைக் காகிதத்தில் வரையவும். இது உனது அறையின் சதுரக்கட்ட வரைப்படம்.



@KTBS
NOT TO BE REPUBLISHED

இப்பொழுது, அறையிலுள்ள பொருட்களைக் குறிப்பிட வேண்டுமல்லவா? இப்பொருட்களின் இடங்களை சரியாகக் குறிப்பிட வரைந்துள்ள வரைபடத்தில், கீழே காண்பிக்கப்பட்டவாறு ஒரு செ.மீ. இடைவெளியில் மேலும் கோடுகளை வரைக.



இங்கு ஒவ்வொரு கட்டத்திற்கும் எண்களைக் குறிப்பிடுக. நீளக்கோடுகளுக்கு எண்களையும், அகலக் கோடுகளுக்கு எழுத்துக்களையும் குறிப்பிடுக. இதனால் பொருட்களை அடையாளம் காண்பது எளிதாகும். பிறகு சதுரக் கட்டங்களிலுள்ள வகுப்பறையின் பொருட்களை அவ்விடங்களுக்குத் தகுந்தவாறு குறிப்பிடுக. ஒரு எடுத்துக்காட்டு இங்கு காண்பிக்கப்பட்டுள்ளது.



வரைபடத்தில் பொருட்கள் எந்த சதுரக்கட்டத் திலுள்ளன என்பதைக் குறிப்பிடு.

பொருட்கள்	அகலம்	நீளம்
கதவு	அ	1
ஜன்னல்		
நாற்காலி		
அலமாரி		
விசுப்பலகை 1		
2.		
3.		
4.		
5.		
6.		

@KTBS NOT TO BE REPUBLISHED

யாஸ்மின் கற்றுக் கொடுத்தவாறு, நீ அளந்துள்ள உனது பள்ளி அல்லது வீட்டு அறையின் வரைபடத்தைக் காகிதத்தில் வரைக. அங்குள்ள பொருட்களை வரைபடத்தில் குறிப்பிடுக.

படித்து தெரிந்துகொள்

வரைபடத்தில் விசாலமான பிரதேசங்களை சிறியதாக வடிவமைக்கலாம். வரைபடத்திலுள்ள சதுரககட்டங்கள் பொருட்களின் இடத்தைச் சரியாகக் குறிப்பிட துணை புரிகின்றன.

அன்வர் தாலுகா அலுவலகத்திற்குச் செல்லும் வழியை அன்வர் காண்பித்த முறை பின் வருமாறு.

முக்கியத் தெருவின் நடுவில் காந்தி சதுக்கமுள்ளது. அதற்குக் கிழக்கு நோக்கி சென்றால் வலது பக்கத்தில் முதலில் உணவு விடுதி (ஹோட்டல்) காணப்படும். அதற்கப்பால் மாணவர் விடுதி, மேலும் முன்னோக்கிச் சென்றால் அஞ்சல் அலுவலகம் உள்ளது. அதற்கு அடுத்து பள்ளிக்கூடம் உள்ளது. அதற்கு அருகில் தாலுகா அலுவலகம் இருக்கிறது. பள்ளிக்கூடத்திலிருந்து சுமார் இருபது மீட்டர் தூரமிருக்கலாம். இடைவெளி தூரத்தை அடிகளில் அளந்துள்ளேன்.

திசை மற்றும் திசையைக் குறிக்கும் அடையாளங்களின் துணையுடன், காந்திசதுக்கத்திலிருந்து தாலுக்கா அலுவலகத்திற்குச் செல்லும் வழியை எளிய வரைபடமாக அன்வர் தயாரித்துள்ளான்.

NOT TO BE REPUBLISHED @KTBS





திசையைக் குறிக்கும் அடையாளங்கள்.

1. வட்டம் 2. ஹோட்டல் 3. மாணவர் விடுதி 4. அஞ்சல் அலுவகம் 5. தொடக்கப் பள்ளி 6. தாலுகா அலுவலகம் 7. உயர்நிலைப்பள்ளி 8. விளையாட்டு மைதானம்.

ஒரு வாக்கியத்தில் விடையளி :

1. விசாலமான பிரதேசத்தை வரைபடங்களில் எந்த அளவில் அமைக்கிறார்கள்?

___

2. வரைபடத்தில் பொருட்களின் சரியான இடத்தை எவ்வாறு குறிப்பிடலாம்?

___

சதுரவடிவ அறையில் ஒரு மேசை மற்றும் நான்கு நாற்காலிகளை வைக்க வேண்டும். அவற்றை அறை வரை படத்தின் எந்த சதுரக்கட்டத்தில் பொருத்துவாய்.



பொருட்கள்	சதுரங்கள்	பொருட்கள்	சதுரங்கள்
	அ 4		
	ஈ 1		
	ஈ 4		
	அ 1		

உனது வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்கின்ற வழியின் வரைபடத்தைத் தயாரிக்கவும். வழியின் வரைபடத்தை விடுவிப்பதற்கு குறியீடுகளைப் பயன்படுத்தவும்.



வரைபடத்தினை வரைந்து பிறகு உனது நண்பர்களுடைய வரைபடத்தை மாற்றிக்கொள். வரைபடத்தைக் கண்டு உனது நண்பர்களுடைய வீட்டிற்குச் செல்கிற வழி, திசை மற்றும் திசைக்கான அடையாளங்களைத் தெரிந்துகொள். வழிகாட்டி வரைபடத்தில், நில அடையாளங்கள் மற்றும் திசைகளின் துணையுடன் வடிவமைக்கலாம்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பேருந்து செல்கிற வழியை அம்புக்குறியால், இந்த எளிய வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பேருந்தில் உட்கார்ந்து பயணிக்கையில் காண்கின்ற நில அடையாளங்களைக் கூறுக.



அறிந்துக் கொள்க:

- அனைத்து வரைபடங்களின் அளவுகளும் சென்டிமீட்டர் அல்லது அங்குலங்களில் இருக்கும்.
- உலகப்படம் என்பது பூமியின் வரைபடம்.
- உலகப்படத்தின் துணையுடன் பூமியின் இயற்கை அமைப்பு, பூமியிலுள்ள வழிகள் மற்றும் மக்கள் தொகை அதிகமுள்ள பிரதேசங்கள் முதலியவற்றை அறிந்து கொள்ளலாம்.
- கற்பனைக் கோடுகளான அட்ச, தீர்க்க ரேகைகள் பூமியின் வரைபடத்தில் சதுரக்கட்டங்களை வடிவமைக்கத் துணைபுரிகின்றன.
- பல்வேறு வகை வரைபடங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக பூகோளவரைபடம், தட்பவெப்பநிலை வரைபடம், இரயில் போக்குவரத்து வழிகளைக் காண்பிக்கின்ற வரைபடம் முதலியன.
- முதன் முதலில், எகிப்து மன்னர்கள் தங்களது ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களைத் தெரிந்து கொள்வதற்காக வரைபடங்களை அமைத்தார்கள் எனப்படுகிறது. முதன்முதலில் பூமியின் வரைபடத்தை கிரேக்க நாட்டினர் கி.பி 540- இல் வடிவமைத்தார்கள் எனப்படுகிறது.

NOT TO BE REPUBLISHED ©KTBS